# கிராமின் கிருஷி ம aus சம் சேவா

இந்தியா வானிலை ஆய்வு துறை

**தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்**

**கோவை, தமிழ்நாடு**

## அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 30-09-2022**

திருவள்ளூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-09-30 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)

| வானிலை காரணி | 2022-10-01 | 2022-10-02 | 2022-10-03 | 2022-10-04 | 2022-10-05 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 35.0 | 8.0 | 6.0 | 0.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 32.0 | 31.0 | 34.0 | 35.0 | 36.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 27.0 | 26.0 | 28.0 | 28.0 | 28.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 70 | 70 | 70 | 70 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 50 | 50 | 40 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 12.0 | 14.0 | 12.0 | 10.0 | 8.0 |
| காற்றின் திசை (கோணம்) | 290 | 280 | 280 | 280 | 280 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 7 | 4 | 4 |

### வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

அக்டோபர்- 01, 02, 03-ஆகிய தேதிகளில் லேசான முதல் மிதமான மழைப் பொழிவு எதிர் பார்க்கலாம்; காற்றின் வேகம் மணிக்கு சுமார் 8.0-14.0 கி.மீ என்றளவில் வீசக் கூடும்; காற்றானது மேற்கு முதல் மேற்கு வடமேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்; அதிகபட்ச வெப்பநிலை முறையே 31.0°C-36.0°C-ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 26.0°C-28.0°C-ஆகவும் எதிர் பார்க்கலாம்; காலை நேரங்களில் நிலவும் காற்றின் ஒப்பு ஈரப்பதம் முறையே 70-80%-ஆகவும் மற்றும் மாலை நேரங்களில் நிலவும் காற்றின் ஒப்பு ஈரப்பதம் முறையே 40-50%-ஆகவும் காணப்படலாம்.

### பொது ஆலோசனை:

05.10.2022 முதல் 11.10.2022 வரை தமிழ்நாட்டில் மழைப்பொழிவு எதிர்பார்க்கப்பட்ட இயல்பு நிலையினை விட அதிகப்படியாக பதிவாகக்கூடும்.மற்றும் அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை எதிர்பார்க்கப்பட்ட இயல்பு நிலையில் பதிவாகக்கூடும்.

### குறுஞ்செய்தி :

லேசான முதல் மிதமான மழைப்பொழிவு எதிர்பார்க்க படுவதால் விவசாயிகள் தங்கள் வயல்களில் நீர் தேங்காதவாறு முறையான வடிகால் வசதியினை மேற்கொள்ளவும்.

### பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | 1.தண்டுத்துளைப்பான்- ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்க்கு ப்ளூபெண்டியாமைடு 20% WP 50 கிராம் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும; 2. இலை சுருட்டுப்புழு- ஏக்கருக்கு அசிபேட் 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் என்ற வீதம் 200 மில்லி லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 3.செம்புள்ளி நோய்- ஆரம்ப நிலை நோய் அறிகுறி தென்பட்டால் ஏக்கருக்கு மெட்டோமினோஸ்ட்ரோபின் 200 மில்லி லிட்டர் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். |
| நிலக்கடலை | 1.சுருள்பூச்சி- ஏக்கருக்கு மெத்தில் டெமெக்டோன் 25 EC 400 மில்லி லிட்டர் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். இரவு 8 முதல் 11 மணி வரை விளக்கு பொறியினை ஒளிர செய்து கவர்ந்து அழிக்கலாம்; 2.அறுவடைக்கு தயாராக உள்ள நிலக்கடலையை அறுவடை செய்து பாதுகாப்பான இடங்களில் சேமித்துத் வைக்க வேண்டும். |
| மல்லி கை | மொட்டு துளைப்பான்- 1.விளக்குப்பொறி அமைத்து அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம்; 2.வேப்பங்கொட்டை வடிநீர் 5 சதம் தெளிக்கலாம் அல்லது தியாகோபிரிட் 240 SC ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி லிட்டர் வீதம் கலந்து தெளிக்கலாம். 3.செடிகளை சீரான கவாத்து செய்து, தோட்டத்தை சுத்தமாக வைத்துக் கொள்ளவும். |
| கரும்பு | கரும்பு- 1.இடைக்கணுப் புழு- I). முட்டை ஒட்டுண்ணி டிரைகோகிரம்மா கைலோனிஸ் அட்டையினை ஏக்கருக்கு 1 சி.சி என்ற வீதம் 15 நாட்களுக்கு ஒருமுறை என்றவாறு 4வது மாதத்திலிருந்து வயலில் கட்டி விட வேண்டும். II).150 மற்றும் 210வது நாட்களில் முறையாக சோகை உரித்தல் வேண்டும். இதனால் இலைப்பரப்புகளில் ஒட்டிக் கொண்டிருக்கும் கூட்டுப்புழுக்கள் நீக்கப்படும்; III).அதிகப்படியான நைட்ரஜன் உரமிடுதலைத் தவிர்க்கவும். இதனால் இலை தீதலில் இருந்து தவிர்களாம். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கத்திரிக்காய் | குருத்து மற்றும் காய்த்துளைப்பான்- அசாடிராக்டின் 1.0 % EC (10000ppm) ஒரு லிட்டர் தண்ணீருக்கு 3 மில்லி லிட்டர் என்ற வீதம் கலந்து தெளிக்கலாம், பூச்சிக்கொல்லியை நடவு செய்த ஒரு மாதத்திற்கு பிறகு 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கலாம் அல்லது எமாமெக்டின் பென்சோயேட் 5 % SG 10 லிட்டர் தண்ணீருக்கு 4 , என்ற வீதம் கலந்து தெளிக்கலாம். |